மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# மரபுகவிதைகளில் இளைஞர்களின் உணர்ச்சி வெளிப்பாடு

# Emotional Expressions of Youngsters Found in Poems on Instagram

சர்வேந்திரன் சந்தர்/ Sarveinthirran Chandar[1]
இஷாந்தினி தமிழரசன்/ Hishanthini Thamilarasan[1]
மலர்விழி சின்னையா/ Malarvizhi Sinayah[2]
[1] Undergraduate Student, Faculty of Languages and Linguistics, University Malaya
[2] Senior Lecturer, Faculty of Language and Linguistics, University Malaya
Corresponding Email: chandarsarveinthirran@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய இளைஞர்களின் விருப்பத்துக்குரிய சமூக வலைத்தலங்களுள் படவரியும் ஒன்றாகும். இப்படவரியில் இளைஞர்ககள் தம் உணர்ச்சி வெளிப்பாட்டையும் கருத்துகளையும் பதிவு செய்கின்றனர். சமீப காலமாக உணர்ச்சி வெளிப்பாடு சார்ந்த ஆய்வுகள் அதிகமாக மேற்கொள்ளப்பட்டாலும், ஒருவரின் அக உணர்ச்சிகளைக் கண்டறிவது இன்னும் சவாலானதாகவே உள்ளது (Minaee, et al, 2021). எனவே, படவரியில் இளைஞர்கள் பதிவிடும் அல்லது பகிரும் மரபு கவிதைகளில் வெளிப்படும் பயனர்களின் அக உணர்ச்சியை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது. அவ்வகையில், படவரி மரபு கவிதைகளில் இடம்பெறும் இளைஞர்களின் உணர்ச்சி வெளிப்பாடுகளை அடையாளங் காண்பதும், அவற்றை விவரிப்பதும் இக்கட்டுரையின் நோக்கங்களாகும். படவரியில் இளைஞர்கள் பதிவிடும் மரபு கவிதைகளைத் தரவுமூலமாகக் கொண்ட இக்கட்டுரையில், உற்றுநோக்கிச் சேகரிக்கப்பட்ட தரவுகள், தொல்காப்பியரின் 'மெய்ப்பாட்டு' என்ற கோட்பாட்டின் துணையுடன், தரவியல் முறைமையில் பகுப்பாய்வுச் செய்யப்பட்டன. படவரியில் அதிகமாக வெளிப்படும் இளைஞர்களின் உணர்ச்சிகளை அடையாளம் காண்பதன்வழி, இளைஞர்கள் பெரிதும் வரவேற்கின்ற கவிதை வகைகளை அறிந்திட இக்கட்டுரைத் துணைச்செய்யும்.

**கருச்சொற்கள்:** இளைஞர்கள், உணர்ச்சி வெளிப்பாடு, படவரி, மரபு கவிதைகள், மெய்ப்பாடு

**Abstract**

Nowadays' youth have a particular fondness for Instagram among social networking platforms. Young people post their thoughts and emotional expressions on Instagram. Even with the recent increase in study on emotional expressiveness, it can still be difficult to identify one's own internal emotions (Minaee, et al., 2021). As a result, the purpose of this research is to investigate the inner feelings of readers as they are conveyed in conventional poetry that young people upload or distribute online. This article's goals are to identify and characterise the young people's emotional emotions in traditional poetry by Instagram. The traditional poems that young people write on Instagram served as the basis for this paper. Tolkappiyar's theory of "meipadu" was used to support the statistical analysis of the observational data. By identifying the emotions of the young people that are more exposed in the picture, this article will help to know the types of poetry that the young people are most receptive to. This article will assist in determining the kinds of poems that young people are most responsive to by highlighting the feelings of the more exposed youth in Instagram.

**Keywords:** Youth, Emotional Expression, Instagram, Traditional Poetry, Authenticity

## முன்னுரை

இணையம் என்பது இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய கண்டுபிடிப்பு ஆகும். இது சமூக ஊடகங்களுக்கும் பிற தகவல்தொடர்பு தளங்களுக்கும் வழிவகுக்கிறது. அத்தகைய சமூக ஊடகங்களில் சிறந்த கண்டுபிடிப்பாக படவரி (INSTAGRAM) திகழ்கிறது (Holak & McLaughlin, 2021). இப்படவரி ஒரு பில்லியனுக்கும் அதிகமான பயனர்களைக் கொண்ட பிரபலமான தளமாகும் (Dixon, 2022). இந்தத் தளம் 18 வயது முதல் 29 வயது வரையிலான இளைஞர்களால் மிகவும் விரும்பப்படுகிறது (Auxier & Anderson, 2021). படவரியில் ஒருவர் படங்களையும் காணொலிகளையும் பதிவேற்றவும், அவற்றைப் பிற பயனர்களுடன் பகிரவும் பதிவேற்றியவற்றைத் திருத்தவும் முடியும் (Fardouly et al., 2018). தற்போது படவரி இளைஞர்களின் வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்றாக இருகின்றது.

உலக சுகாதார அமைப்பு (World Health Organisation, 2020), 10 முதல் 19 வயதிற்கு உட்பட்டவர்களை இளம் பருவத்தினராகவும் 15 முதல் 24 வயதிற்கு உட்பட்டவர்களை இளைஞர்களாகவும் வரையறுக்கிறது. இக்கட்டுரையில் 10 முதல் 24 வயது வரம்பிற்கு உட்பட்டவர்கள் இளைஞர்களாகக் கொள்ளப்பட்டனர். இப்பிரிவினர் தங்களை அடையாளப்படுத்தவும் தங்களின் உணர்ச்சியைப் பகிரவும் படவரி செயலியைப் பயன்படுத்துகின்றனர். உணர்ச்சி வெளிப்பாடு என்பது உள்ளத்து உணர்ச்சியையும் அகவெளிப்பாட்டையும் கட்டமைத்து உணர்த்தும் விடையமாகும். இதுதனிநபரின் அகவுணர்வைப் பற்றிய தகவல்களைத் தெரிவிப்பதாகவோ மற்றவர்களின் பதில்களை அல்லது கருத்துகளைத் தூண்டுவதாகவோ அமைகின்றது (Anderson, Monroy & Keltner, 2018).

கவிதை வகைமைகளில் தொன்மையானதாக அறியப்படுவது மரபு கவிதையாகும். தமிழில் உள்ள யாப்பிலக்கண நூல்கள் மரபு கவிதை இயற்றும் முறையை எடுத்துரைக்கத் தோன்றியனவேயாகும். யாப்பு வடிவத்திற்கு அடிப்படை சந்தமும் (Rhythm), தொடையும் (Rhyme) ஆகும். சந்தம் என்பது அழுத்தமான ஓசையும் அழுத்தமில்லா ஓசையும் சீர்பட அடுக்கி வருவதைப் பொறுத்தது. அழுத்தமுள்ள ஓசையும் அழுத்தமில்லாத ஓசையும் மாறி மாறி இடம்பெறுவதால் ஒரு நயமான ஓசை பிறக்கிறது. மரபு கவிதைகள் ஒரு காலத்தில் இசையோடு பாடப்பட்டிருக்க வேண்டும். பிற்காலத்தில் இவை படிக்கப்படுவனவாக மட்டுமே அமைந்து விட்டன என்று சிவகுமார் (2017) குறிப்பிடுகிறார். மேலும், பாக்களின் ஓசை நயத்துக்குக் காரணமான சொற்களை அளவிட்டுச் சீர் எனக் குறிப்பிட்டனர் என்றும் எடுத்துரைக்கிறார். மரபு கவிதைகள் பல உணர்ச்சிகளை வெளிப்படுத்த துணைப்புரிகின்றன. காதல், கோபம், வெறுப்பு, சோகம், மகிழ்ச்சி என பல உணர்வுகளை மரபு கவிதைகளின் மூலம் வெளிப்படுத்த முடிகிறது.

இளைஞர்களும் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்த, சமூக ஊடகமன படவரியில் மரபு கவிதைகளை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர். சமீப காலமாக உணர்ச்சி வெளிப்பாடு சார்ந்த ஆய்வுகள் அதிகமாக மேற்கொள்ளப்பட்டாலும், ஒருவரின் அக உணர்ச்சிகளைக் கண்டறிவது இன்னும் சவாலானதாவே உள்ளது (Minaee, et al, 2021). எனவே, படவரியில் இளைஞர்கள் பதிவிடும் அல்லது பகிரும் மரபு கவிதைகளில் வெளிப்படும் பயனர்களின் அக உணர்ச்சியை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது. அவ்வகையில், படவரி

மரபு கவிதைகளில் இடம்பெறும் இளைஞர்களின் உணர்ச்சி வெளிப்பாடுகளை அடையாளங்காண்பதும், அவற்றை விவரிப்பதும் இக்கட்டுரையின் நோக்கங்களாகும்.

**ஆய்வு முறைமை**

படவரியில் இளைஞர்கள் பதிவிடும் மரபு கவிதைகளைத் தரவுமூலமாகக் கொண்ட இக்கட்டுரையில், உற்றுநோக்கிச் சேகரிக்கப்பட்ட தரவுகள், தொல்காப்பியரின் 'மெய்ப்பாட்டு' என்ற கோட்பாட்டின் துணையுடன், தரவியல் முறைமையில் பகுப்பாய்வுச் செய்யப்பட்டன. மெய்யில் (உடலில்) தென்படுவது மெய்ப்பாடு. அதாவது மனித உள்ளத்தின் உணர்ச்சிகள் உடலில் தென்படுவது மெய்ப்பாடு எனப்படுகிறது. தொல்காப்பிய பொருளதிகாரத்தில் உள்ள ஒன்பது இயல்களுள் ஆறாவது இயலாக அமைந்திருப்பது மெய்ப்பாட்டியல் (தொல்காப்பிய நெறி) ஆகும்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பாலெட்டே மெய்ப்பாடடென்ப "
(தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்:3, சூத்திரம்:247)

எனும் தொல்காப்பியரின் கோட்பாடு உரைக்கும் மெய்ப்பாடுகள் எட்டு. அவை தோன்றும் இடங்கள் என்று ஒவ்வொன்றும் நான்கு வகைகளாகப் பகுக்கப்பட்டு, தொல்காப்பியத்தில் மொத்தம் 32 மெய்ப்பாடுகள் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன. இக்கோட்பாடைக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. 2021 மே முதல் 2023 மே வரை, படவரியில் பதிவேற்றப்பட்ட இளம் எழுத்தாளர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட 36 கவிதைகள் இவ்வாய்விற்கு உட்படுத்தப்பட்டன.

**தரவுப் பகுப்பாய்வு**

படவரியில் காணப்படும் அதிகமான மரபு கவிதைகளில் இளைஞர்களின் எண் வகை உணர்ச்சி வெளிப்பாட்டையும் காணமுடிந்தாலும், கட்டுரையின் பக்க அளவைக் கருத்தில் கொண்டு, நான்கு நேர்மறை உணர்வுகளான மருட்கை, பெருமிதம், உவகை, நகை (Malarvizhi & Paramasivam, 2017) ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒரு எடுத்துக்காட்டு மட்டும் தரப்பட்டுள்ளது. இவ்வாய்விற்குத் தேர்தெடுக்கப்பட்ட 36 கவிதைகளை உற்று நோக்கியதில், அடையாளங்காணப்பட்ட இளையோரின் உணர்ச்சி வெளிப்பாட்டின் அடுக்கத்தை (frequency) அட்டவணை 1 சுட்டுகிறது.

அட்டவணை 1: படவரிக் கவிதைகளில் இளையோரின் உணர்ச்சி வெளிப்பாடு

| மெய்ப்பாடுகள் | விழுக்காடு (%) |
|---|---|
| பெருமிதம் | 58.3 |
| மருட்கை | 69.4 |
| நகை | 16.6 |
| உவகை | 22.2 |

நால்வகை நேர்மறை உணர்வுகளில், படவரியில் இளையோர் பகிர்ந்த கவிதைகளுள் பெருமிதமும் (58.3%) மருட்கையுமே (69.4%) மற்ற இரு உணர்வுகளைக் காட்டிலும் அதிகமாக இடம்பெற்றிருந்தன.

### பெருமிதம்

பெருமிதம் என்பது யாவரோடும் ஒப்ப நில்லாது மேம்படுதல் எனப் பொருள்படும். அச்சமானது ஒரு மனிதனை எந்த அளவிற்கு முடக்கிப் போடுகிறதோ அந்தளவு பெருமிதமானது ஒரு மனிதனைப் புகழ், சிறப்பு ஆகியவற்றால் முடக்கத்திலிருந்து வெளிவரச் செய்கிறது (தமிழ்ச்செல்வன், 2019). வழுவின சொற்களைச் சொல்லாத படி தெள்ளிய நாவினாலே வல்லார்முன் சொல்லச் செய்யும் கல்வி பற்றிய பெருமிதம் தறுகண், அஞ்சத்தக்கன கண்ட இடத்தில் அஞ்சாமை, இன்பமும் பொருளும் அளவு கடந்து கிடைப்பதாயினும் பழியொடு வரும் செயலைச் செய்யாதிருத்தல் புகழ்மை எனப்படும், கொடை என்பது உயிரும் உடம்பும் முதலிய எல்லாப் பொருள்களையும் கொடுத்தல் என்பதாகும். இத்தன்மையுடைய பெருமித உணர்வை இளைஞர்கள் படவரியில் வெளிப்படுத்தியுள்ளனர்.

காட்டு 1:

| | | |
|---|---|---|
| கவிதை 31 |  | மாதுரை கண்கண்தீ யில் உருவிய<br>தாதுரைபா கண்பெண்தீ யில் மருவிய<br>**குமரன் இணையடிநா வில் பரவிட**<br>**மதனன் கணையடிதா சுடா** |

காட்டு 1இல் சுட்டப்பட்டுள்ள கவிதையில், ‘குமரன் இணையடிநா வில் பரவிட மதனன் கணையடிதா சுடா’ எனும் வரிகளில், முருகப்பெருமானின் இரு திருவடிகளைத் துதித்தால் மன்மதனின் மலர் அம்பு சுடும் நிலை வராது எனும் பொருள் வெளிப்படுகிறது. அதாவது, மன்மதனின் அம்பானது தலைவனும் தலைவியும் கூடி இருக்கும் போது குளிர்ச்சியாகவும், பிரிவில் வெம்மையாகவும் இருக்கும். ஆக, பாடலில் கூறிய சிறப்புப் பொருந்திய

கந்தக்கடவுளைப் போற்றுபவர் இணையரைப் பிரியமாட்டார் என்று பெருமித உணர்வைக் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார்.


**மருட்கை**

மருட்கை பொதுவாக வியப்பால் தோன்றுவதாகும். புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்ற நாலொவகைப் பொருண்மையைக் கொண்டிருப்பதே மருட்கையாகும் (தமிழ்ச்செல்வன், 2019). இதனையே தொல்காப்பியர், 256-வது சூத்திரத்தில்,

> புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
> மதிமை சாலா மருட்கை நான்கே
> (தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்:7, சூத்திரம்:256)

என்று கூறியுள்ளார். இதுவரைக் காணாததைக் கண்ட புதுமை, அளவின் மிக்க பெருமை, அளவின் மிகக் குறைந்த சிறுமை, ஒன்று பிறிதொன்றாகும் ஆக்கம், இவை நான்குமே அறியாமல் அறிவதே வியப்பு என்கிறார் தொல்காப்பியர். இளைஞர்கள் படவரியில் மருட்கை உணர்வையும் பெருமையின் வழி வெளிப்படுத்தியுள்ளனர்.

காட்டு 2:

<table>
<tr>
<td>கவிதை 1</td>
<td>
</td>
<td>ஆராத துன்பங்கள் ஆயிரந்தான்<br>கண்களிலே அருவியென நிலம்நோக்கிப்<br>பாய்ந்தலும்<br>தீராத மனவலிகள் இளநெஞ்சில் கசிந்தென்றும்<br>தீப்பட்ட தேன்கூடாய்ச் சிதைந்தாலும்<br>பாராத பரம்பொருளாய்ப் புறத்தினிலே<br>உனையென்றும்<br>தேடாத பகுதியில்லை கட்புலனில்!<br>சோராத உளத்துடனே சோதியனே நானுன்னை<br>என்னாளும் துதித்திடுவேன் உட்புலனில்!</td>
</tr>
</table>

காட்டு 2இல் உள்ள கவிதையில், 'பாராத பரம்பொருளாய்' எனும் வரியின் மூலம் எம்பெருமான ஈசனின் பெருமையை அறிய முடிகிறது. மிக மேலான பண்புகளைக் கொண்டு, எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கும், எங்கும் வியாபித்து நீக்கமற நிறைந்திருக்கும் பொருள்தான் பரம்பொருளாகும். ஆக, உயரந்தவர்களுக்கெல்லாம் உயர்ந்தவர் என்ற எம்பெருமானின் பெருமையை இளம் கவிஞர் எடுத்துரைக்கிறார். இதன்வழி, அவ்விளைஞரின் மருட்கை உணர்வு வெளிப்படுகிறது.

**நகை**

“இடுக்கண் வருங்கால் நகுக” என்றார் வள்ளுவர். “வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்பது முதுமொழி. நகை, எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்ற நான்கு பொருள் பற்றி வருவதனை,

> “எள்ளல் இளமை பேதைமை மடனென்று
> உள்ளப் பட்ட நகைநான் கென்ப”
> (தொல்.பொருள். மெய்ப்.நூ.248)

என்னும் நூற்பாவின் மூலம் அறியமுடிகின்றது.

காட்டு 3:

| | | |
|---|---|---|
| கவிதை 10 |  | செழுமைப் பேச்சு மிக்கவனாய்<br>சேர்ந்தான் எங்கள் கூட்டத்திலே<br>**வழுவே இல்லாச் செயல்கள்பல**<br>**வருந்திச்செய்யும் செழியன் அவன்** |

காட்டு 3 சுட்டும் கவிதை 10-இல், ‘வழுவே இல்லாச் செயல்கள்பல வருந்திச்செய்யும் செழியன் அவன்’ எனும் வரிகளில் கவிஞர் தன் நண்பனை நகைக்கிறார். பழு இல்லாத வேலையைக் கூட சுமையாக நினைத்து செய்யக்கூடியவன் தன் நண்பன், என்று அவர் இக்கவிதையில் எடுத்துரைக்கிறார். தன் நண்பனின் சோம்பேறி தனத்தை, நகை உணர்வுடன் இளம் எழுத்தாளர் இக்கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

**உவகை**


மகிழ்ச்சி அன்பு, இன்பம் காமம், இன்பச்சுவை என்று சொல்லக் கூடிய துன்பத்தை நீக்கும் உவகை பெரும்பாலும் காமஇன்பத்தின் கண் சேர்ந்துரைக்கப் பட்டுள்ளது. இம்மெய்ப்பாடு மனித உள்ளத்திற்கும், உடலுக்கும், வாழ்விற்கும் ஆக்கமும் ஊக்கமும் தருவதாகும். அவையே,

> “செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
> அல்லல் நீத்த உவகை நான்கே”
> (தொல்-பொருள்-1005)

செல்வம் என்பது பல்வகைப் பொருள்களின் நுகர்ச்சி. புலன் என்பது கல்வியின் பயனாகிய அறிவுடைமை எனும் நுகர்ச்சி. புணர்வு என்பது அன்போடு இருவர் இணைந்து வாழும் நுகர்ச்சி. வெறும் உடலால் ஏற்படும் காமப்புணர்ச்சியை மட்டுமே இது குறிக்காது,

அன்போடு இணைந்து வாழும் வாழ்க்கையைப் புணர்ச்சியைச் சுட்டுகிறது. அந்த வகையில், இளமையும் இருவர் உள்ளத்தே ஒத்த காமத்தையும் ஒன்றாகப் பெற்றவர்கள் பெறும் ஐம்புலன் நுகர்ச்சி என்பது காமப்புணர்ச்சி. ஆறு, குளம், சோலை முதலிய வனப்பு மிக்க இடங்களில் தங்கி, துணையொடு ஒன்று சேர்ந்து விளையாடி மகிழுவது விளையாட்டு ஆகும். உவகை எனும் மெய்ப்பாட்டையே அனைவரும் எப்போதும் நிலைத்திருக்க வேண்டுமென்கின்றனர் (தமிழ்ச்செல்வன், 2019).

காட்டு 4:

| | | |
|---|---|---|
| கவிதை 30 |  | பாலாடைப் பெண்கள்தம் மேலாடை நீக்கி,பின்<br>சேலாடும் ஆற்றினில் நீராட - வாலாட்டும்<br>கண்ணனிடம் கோபியர் கெஞ்சினர்,<br>**"ஆடைவேண்டாம்,**<br>**விண்முகிலே! ஆடையாய் வா!!"** |

காட்டு 4-இல் இடம்பெற்றுள்ள "ஆடைவேண்டாம், விண்முகிலே! ஆடையாய் வா!!" என்ற வரிகளால், ஆற்றில் குளிக்கும் பெண்களின் ஆடைகளை எடுத்துக்கொண்டு விளையாடுவதை நாம் பார்க்க முடிகிறது. ஆக, இக்கவிதையின் மூலம் இளைஞர் உவகை எனும் மெய்ப்பாடை வெளிப்படுத்தியுள்ளார்.

**நிறைவுரை**

உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடாகத் தோன்றும் புறக்குறிகள் மெய்ப்பாடுகள் ஆகும். கவிதையின் மூலம் உள்ளத்துணர்ச்சிகள் இயல்பாக வெளிப்படும். ஒருவனின் உணர்ச்சி கவிதையை வாசிப்போருக்குச் சுலபமாகப் புலப்படும் (தமிழ்ச்செல்வன், 2019). அவ்வகையில், படவரியில் காணப்படும் மரபு கவிதைகளிலும் இளைஞர்களின் உணர்ச்சி வெளிப்பாட்டை அறிய முடிகின்றது.

## துணைநூற்பட்டியல்


Anderson, C. L., Monroy, M., & Keltner, D. (2018). Emotion in the wilds of nature: The coherence and contagion of fear during threatening group-based outdoors experiences. Emotion, 18(3), 355.

Auxier, B., & Anderson, M. (2021). Social media use in 2021. Pew Research Center, 1, 1-4.

Dixon, S. (2022). Number of Instagram Users Worldwide from 2020 to 2025 (in billions). Retrieved from https://www.statista.com/statistics/183585/instagram-number-of-global-users/

Fardouly, J., & Vartanian, L. R. (2016). Social media and body image concerns: Current research and future directions. Current opinion in psychology, 9, 1-5.

Holak, B., & McLaughlin, E. (2017, May 26). What is Instagram?. Defination from TechTarget. CIO. Retrieved February 10, from https://www.techtarget.com/searchcio/definition/Instagram

Malarvizhi, S., & Paramasivam, M. (2017). Emotions in Text Based Facebook Communication. Arimaa Nokku. 10(4), 15-19

Minaee, S., Minaei, M., & Abdolrashidi, A. (2021). Deep-emotion: Facial expression recognition using attentional convolutional network. Sensors, 21(9), 3046.

Niranjan Kumar [@kavithai_kal]. (n.d.). இறை வாழ்த்து [Post]. Instagram. Retrieved April 23, 2023, from https://www.instagram.com/p/CdGkT2YBcU0/?igshid=MzRlODBiNWFlZA==

Sharansuklam Athmalingam [@sharansuklam_athmalingam]. (2023, April 16.). சோதியன் [Post]. Instagram. Retrieved April 23, 2023, from https://www.instagram.com/p/CrNCL3NLo9MBuqmouSWkwClwLy5ehoEzylWY7w0/?igshid=NTc4MTIwNjQ2YQ==

Sharansuklam Athmalingam [@sharansuklam_athmalingam]. (n.d.). செழியன் [Post]. Instagram. Retrieved April 23, 2023, from https://www.instagram.com/p/B-SWbuNFIkjFu7QkNOqDwAMa9Cfw6q9bS5N18Q0/?igshid=MzRlODBiNWFlZA==

Veeru [@veeruice]. (n.d.). கொஞ்சும் கோபியர் [Post]. Instagram. Retrieved April 23, 2023, from https://www.instagram.com/p/CBH_7CtldMF/?igshid=MzRlODBiNWFlZA==

World Health Organization. (2020). Adolescent health in the South-East Asia region. Retrieved July 26, 2021, from https://www.who.int/southeastasia/health-topics/adolescent-health

சிவக்குமார். கி. தமிழ் இணையக் கல்விக்கழகம் TAMIL VIRTUAL ACADEMY. (2017). மரபுக் கவிதை. Retrieved May 5, 2023, from http://www.tamilvu.org/ta/courses-degree-p203-p2031-html-p2031221-29856

தமிழ்ச்செல்வன். (2019). எண் வகை மெய்ப்பாடுகள். பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், 4, 8.